அடையாள இலக்கம்:

D ☐ ☐ ☐ ☐ ☐ ☐

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2021

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்

Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

## அதிமேற் பிரிவு

(12 – 14 வயதுப் பிரிவு)

நேரம்: 2 மணித்தியாலங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**(அ) கீழே தரப்பட்ட சொற்களைப் பிரித்து எழுதுக** (5 புள்ளிகள்)

1. நாற்சந்தி ________________ + __________________
2. என்னைத்தேடினான் ________________ + __________________
3. ஏனென்றால் ________________ + __________________
4. உடல் உறுப்புகள் ________________ + __________________
5. தினமொரு ________________ + __________________

**(ஆ) கீழே தரப்பட்ட சொற்களுக்கு எதிர்ப்பொருள் கொண்ட சொற்களை எழுதுக.** (5 புள்ளிகள்)

1. ஏழை = ______________________________
2. குழப்பம் = ______________________________
3. மூத்தவர் = ______________________________
4. நண்பகல் = ______________________________
5. ஒருமை = ______________________________

**(இ) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களிற் கோடிடப்பட்டுள்ள இடங்களில் பொருத்தமான சொற்களை எழுதி வாக்கியங்களைப் பூர்த்தி செய்க.**

(10 புள்ளிகள்)

1) அழுத பிள்ளை பால் ________________________ குடிக்கும்.

2) காக்கைக்கும் தன் ________________________ பொன் குஞ்சு.

3) தாயாரின் வருகையை எதிர்பார்த்து சிறுவன் வழிமேல் விழி வைத்துக் ________________________.

4) பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு தண்ணீர் சேமிக்கும் பழக்கத்தை ________________________ வேண்டும்.

5) நன்றி ________________________ நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

6) நேற்றைய கலைவிழா இரவு 9 மணிக்கு ________________________.

7) மாணவர்கள் தாம் படித்த பாடங்களை ________________________ படிப்பது மிகவும் நல்லது.

8) இயல், இசை, ________________________ முத்தமிழ் எனக் கூறப்படும்.

9) பெற்றோரை ________________________ என்பது தமிழர்களது உயர்ந்த அறங்களில் ஒன்றாகும்.

10) தற்போது இணையம்வழி கலைகளைப் பற்றிய ________________________ பெற்றுக்கொள்ளலாம்.

**(ஈ) கீழே கோடிடப்பட்ட சொற்களுக்கு மிகப் பொருத்தமான ஒத்த கருத்துள்ள சொற்களின் கீழே கோடிடுக.** (10 புள்ளிகள்)

1. தற்காலத்தில் **தகவல்களை** அழிப்பதில் பல சாதனங்கள் துணைபுரிகின்றன.
   அ. இன்பத்தை ஆ. பொழுதுபோக்கை இ. சாதனைகளை ஈ. செய்திகளை

2. **வைகறையில்** எழுந்து படித்தால் பாடம் மனதில் பசுமரத்து ஆணி போல் பதியும்.
   அ. பகலில் ஆ. இரவில் இ. அதிகாலையில் ஈ. காலையில்

3. ஒவ்வொருவரும் பொதுத் தொண்டில் **பங்கெடுத்து** நாட்டுக்கு சேவை செய்ய வேண்டும்
   அ. உதவி ஆ. விலகி இ. பிரிந்து ஈ. கலந்துகொண்டு

4. காந்தத்திற்கு இரும்பை **ஈர்க்கும்** சக்தி உள்ளது.
   அ. நிறுத்தும் ஆ. கவரும் இ. கொடுக்கும் ஈ. செலுத்தும்

5. தொன்மையான பொருட்களை அரும்பொருளகங்களில் காணலாம்.
   அ. பழமையான ஆ. வரலாற்று இ. விலைமதிப்பற்ற ஈ. அரிய

6. அறிவுடன் அன்பும் **பணிவும்** மிக்க ஒருவரால்தான் வாழ்வில் உயர்வு பெறமுடியும்.
   அ. அடக்கமும் ஆ. இரக்கமும் இ. நம்பிக்கையும் ஈ. ஆர்வமும்

7. **வேகமாக** வந்த வண்டி மரத்துடன் மோதி சேதமடைந்தது.
   அ. தாமதமாக ஆ. விரைவாக இ. மெதுவாக ஈ. சோம்பலாக

8. வள்ளல் ஏழைகளுக்கு பொருள் **ஈந்தார்.**
   அ. எடுத்தார் ஆ. விற்றார் இ. வாங்கினார் ஈ. கொடுத்தார்

9. பொய் சொன்ன மாணவனைக் கண்ட ஆசிரியர் **சினம்** கொண்டார்.
   அ. மகிழ்ச்சி ஆ. வேகம் இ. கோபம் ஈ. கடிந்து

10. **களைப்பு** ஏற்பட்டதால் மாறன் உறங்கச் சென்றான்.
    அ. தூங்க ஆ. களிக்க இ. விழிக்க ஈ. களைப்பாற

**(உ) கீழே தரப்பட்ட ஒவ்வொரு சொல்லையும் பாவித்து அதன் பொருள் விளங்கக் கூடியதாகச் சரியான வசனம் அமைக்கவும்.** (20 புள்ளிகள்)

அ. **அலை :** ………………………………………………………………………………

…………………………………………………………………………………….

**அழை** : …………………………………………………………………………….

…………………………………………………………………………………….

ஆ. **குரை :** …………………………………………………………………………

…………………………………………………………………………………….

**குறை :** ……………………………………………………………………………

…………………………………………………………………………………….

இ. **அறிவு :**…………………………………………………………………………

…………………………………………………………………………………….

**அரிவு** :…………………………………………………………………………

…………………………………………………………………………………….

ஈ. **மனம் :**……………………………………………………………………………..

…………………………………………………………………………………….

**மணம் :**……………………………………………………………………………...

…………………………………………………………………………………….

உ. **மரை** :………………………………………………………………………….

…………………………………………………………………………………….

**மறை** :………………………………………………………………………….

…………………………………………………………………………………….

**(ஊ) கீழே தரப்பட்ட கவிதையைப் கருத்தூன்றிப் படித்த பின்னா் கீழேயுள்ள கேள்விகளுக்குத் தகுந்த விடைகளைத் தருக.** (புள்ளிகள்: 10)

அறிவியல் தந்த அருண் கொடையாய்
அனைவர் கையிலும் அலைபேசி
அவசர உலகம் ஆகையினால்
அவசியம் ஆனது அலைபேசி

அடுத்தவர்க்கு இடராய் இல்லாது – வரும்
அழைப்புகள் தனையும் ஏற்றிடுவாய்
அவசியம் அற்ற அழைப்புகளை
பயணத்தின் போது தவிர்த்திடுவாய்

உரக்கப்பேசி உடன் இருப்போர்
வெறுப்பைத் தேடிக் கொள்ளாதே
உணவு வேளையில் பேசுவதை – உன்
உணர்ந்த விருப்பமாய்ச் செய்யாதே

அறிவியல் தந்த கொடைகளை - தம்பி
அறிவு பூர்வமாய்ப் பயன்படுத்து
அறிவார்ந்த செயலால் இந்நிலத்தை
இனியதம்பி நீயும் நெறிப்படுத்து.

உரிமை ஆக்கியவருக்கே.

1. அறிவியல் தந்த அருட்கொடை எது என பாடல் கூறுகிறது? (2 புள்ளிகள்)

________________________________________

2. எவ்வாறான அழைப்புகளை தவிர்த்தல் வேண்டும் விளக்குக. (4 புள்ளிகள்)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

3. அறிவியலின் அருட்கொடையை நல்ல முறையில் பயன்படுத்த கவிஞர் கூறும் வழிகள் எவை? (4 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

**(எ) பின்வரும் உரைப்பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதன்பின்னர் கீழ்க்காணும் வினாக்களுக்கு உங்கள் சொந்த வசனங்களில் விடையெழுதுக. (25 புள்ளிகள்)**

சோழ மன்னர்கள் வீரம், கொடை, நீதி, நேர்மை ஆகியவற்றில் சிறந்து விளங்கினர் அவர்கள் மக்கள் நலனில் மிகுந்த அக்கறை செலுத்தினர். கலை பண்பாடு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தனர்

சோழ அரசர்களுள் தனிச்சிறப்பு வாய்ந்த அரசர்கள் பலர் செங்கோலோச்சினர். அவர்களுள் தன்னிகரற்றுச் சீரும் சிறப்புடனும் விளங்கியவனே ராஜராஜன். அவனது இயற்பெயர் அருண்மொழித்தேவன். அவன் அரியணை ஏறிய சிறிது காலத்திலேயே பல மன்னர்களை போர்களில் வென்று பெரிய வெற்றிகளை பெற்றான். இதனால் 'மன்னர்க்கு மன்னன்' என்று பொருள்படும் ராஜராஜன் என்னும் சிறப்புப் பெயரும் பெற்றான்.

ராஜராஜன், சிம்மாசனம் ஏறியபின் சோழநாடு பன்மடங்கு பெருகி முன்னேற்றம் பல கண்டது. தமிழ்ப்புலவர்கள் ராஜராஜனைப் புகழ்ந்து பாடாத நாளில்லை. புலவர்கள், ***'சோழ வள நாடு சோறுடைத்து'*** என்று புகழ்ந்து பாடியதோடு சோழ மன்னர்களின் கொடைச் சிறப்பையும் போற்றியுள்ளனர். இவனது நால்வகைப் படை அளவிலும், ஆற்றலிலும் நிகரற்று விளங்கியது. ஆதற்கும் மேலாகச் ˙ சோழனின் கடற்படை கடல் கடந்து சென்று வெற்றிவாகை பல சூடியுள்ளது. ராஜராஜன் தன் படை பலத்தால் தன்னை எதிர்த்த சேர, பாண்டிய படைகளை புறமுதுகு காட்டி ஓடச் செய்திருக்கிறான். ஆதனால், அவனது புகழ் பாரெங்கும் பரவியது.

ராஜராஜன், நாடு வளம் பெறவும் தம் குடிமக்கள் நல்வாழ்வு பெறவும் பல குழுக்களை நியமித்து நல்லாட்சி புரிந்தான். சோழ நாட்டு மக்களும் தமிழ் மொழி வளர்ச்சியிலும், சிற்பக்கலை ஓவியக்கலை தற்காப்புக்கலை, நாட்டியக்கலை போன்றவற்றிலும் ஈடுபாடு காட்டி வந்தனர். ராஜராஜன் தன் ஆளுகையின் போது

நிகழ்ந்த வரலாற்று உண்மைகளை தமிழ் பாடல்களாக் அமைத்துக் கல்வெட்டுகளில் பொறிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினான். அதற்கு ‘மெய்க்கீர்த்தி’ என்று பெயர். பிற்காலத்தில் இவனது மகன் ராஜேந்திரன் ‘கங்கை கொண்ட சோழன்’ என்னும் சிறப்பு பெயர் பெற்றுத் திகழ்ந்தான். தந்தையார் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலைப் போல தானும் கங்கைகொண்ட சோழபுரத்தில் ஒரு கோயிலை எழுப்பினான்.

(15 புள்ளிகள்)

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. சோழ மன்னர்களின் சிறப்புக்கள் எவை? (2 புள்ளிகள்)

________________________________________

________________________________________

2. அருள்மொழித் தேவனுக்கு ராஜராஜன் என்று பெயர் வரக் காரணம் என்ன? (5 புள்ளிகள்)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

3. ‘மெய்க்கீர்த்தி’ என்றால் என்ன என்பதை விளக்குக. (3 புள்ளிகள் )

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

4. ‘ராஜராஜன் நல்லாட்சி புரிந்த அரசன்.’ இந்தக் கருத்தை காரணங்களுடன் விளக்குக. (5 புள்ளிகள்)

**(ஏ) பின்வரும் கட்டுரைகளில் ஒன்றை தெரிவு செய்து 200 சொற்களுக்குக் குறையாது எழுதுக.**

(25 புள்ளிகள்)

அண்மையில் நீர் உமது பாடசாலை வகுப்பு மாணவர்களோடு மேற்கொண்ட ஒரு கல்விச் சுற்றுலாவில் பெற்ற அனுபவங்களை விளக்கி அதனால் மற்றைய மாணவர்கள் பெறுக்கூடிய பயன்களையும் குறிப்பிடும் கட்டுரை.

அல்லது

உடல் உறுப்பு தானத்தினால் பயன்பெற்ற உனது தந்தையார் சுகமாகி உயிருடன் வீடு வந்து சேர்ந்துள்ளார். உடல் உறுப்பு தானம் பற்றிய விழிப்புணர்வை தூண்டும் வகையில் சஞ்சிகைக்கு கட்டுரை எழுதுக.

விடைத்தாள் - ஊ)

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................